**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.262/2019**
**வழக்கு சாட்சி – அ.சா.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வக்குமார் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.23

**(எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பூதிப்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். எதிரியைத் தெரியும். அசா.1 ஐ தெரியும். நான் கடந்த 7.4.2019 ம் தேதி அல்லிநகரத்தில் இருந்து போடிக்கு பவித்ரா என்பவரது வளைகாப்பிற்கு அவரன் உறவினர்கள் சுமார் 18 பேர் உடன் பவித்ராவும் சேர்ந்து மகேந்திரா வேனில் சவாரி சென்றோம். அன்றையதினம் போடியில் இருந்து அல்லிநகரத்திற்கு திரும்ப வரும்போது 2.15 மணியளவில் தீர்த்தத்தொட்டி முருகன் கோவில் பக்கத்தில் பண்ணைத்தோப்பிற்கு அருகே வரும்போது TN 37 AB 7330 PPP என்ற தனியார் வாகனம் நான் இடதுபுறமாக போயிக்கொண்டிருக்கும்போது அவருக்கு வலது புறமாக ரொம்ப வேகமாக வந்தது. நேருக்குநேராக என்னுடைய வாகனமான TN 39 AM 1170 மகேந்திரா டூரிஸ்ட் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. என்னுயை வாகனத்தில் வந்தவர்கள் வெற்றியரசன், சிற்றரசன், சரஸ்வதி, பேச்சியம்மாள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். லீலா அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்து விட்டார். என்னையும் க.விலக்கு மருத்துமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். எனக்கு இடது பக்க கால் உடைந்துவிட்டது. விஜயகுமார் என்பவருக்கு வலது மற்றும் இடது கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. வண்டியில் வந்த மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த முத்துலாபுரத்தைச் சேர்ந்த ஓட்டுனர் கண்ணன் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரிதான் சம்பவத்தன்று மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த கண்ணன் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** செய்யப்படவில்லை.